**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.K.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 117/2021** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ஏழுமலை | **வயது** | : | 62 |
| **த.பெ** | : | கோவிந்தராஜ் | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | இந்திரவனம் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>03.07.2026 – வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் காசு கொடுக்காமல் இருந்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி எப்படி பழக்கம் என்றால் ஊர்காரர். பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் எந்த இடத்தில் வைத்து கொடுத்தீர்கள் என்றால் 16.10.2018 ல் என் வீட்டில் வைத்து கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது யார் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் ஏழுமலை மற்றும் சின்னராஜ் சாட்சி கையொப்பம் போட்டனர். எனக்கு படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு ஆங்கிலத்தில் உள்ளது படித்து சொன்னார்கள் அதில் உள்ள விவரங்கள் தெரியும். நான் படித்துபார்த்து தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவாவில் 3 ம் பத்தியில் என்ன தேதி குறிப்பிட்டுள்ளேன் என்றால் 14.0.2018 என்று உள்ளது. நான் சொல்லும் தேதி இந்த தாவாவில் குறிப்பிடவில்லை என்றால் பிரின்டிங் மிஸ்டேக். மேற்படி பிரின்டிங் மிஸ்டேக் தவறை திருத்தம் செய்வதற்காக மனு எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பணத்தை வட்டிக்கு விடுவது மட்டுமே என் வேலை, பணம் திருப்பிகொடுத்தவுடன் பாண்டை திருப்பிதராமல் ஏமாற்றுவது தான் எனக்கு வேலை என்றால் சரியல்ல. என் மீது பிரதிவாதியும் மற்ற நபர்களும் சேர்ந்து சேத்பட் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, நான் தான் கொடுத்தேன், என் மகள் திருமணத்திற்காக பணம் வேண்டும் என்று நான் தான் புகார் கொடுத்தேன். நீங்கள் புகார் அளிக்கவில்லை, பிரதிவாதிதான் உங்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நீங்கள் எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் என்றால் ரூ.30000 பிதிவாதிக்கு கொடுத்தேன், அனைத்தும் 500 ரூபாய் தாள்கள் ஆகும். என்னிடம் பிரதிவாதி ரூ.30000 பணம் வாங்கவில்லை என்றும், பிரதிவாதி ஏற்கனவே 4 வருடத்திற்கு முன்பு உங்களிடம் பெற்ற பணத்தை திருப்பிஅளித்துவிட்டார் ஆனால் அந்த பாண்டை நீங்கள் தரவில்லை என்றால் சரியல்ல. பணத்தை கொடுத்தபின்பு நீங்கள் பாண்டை தேடிதருகிறேன் என்று நீங்கள் கூறியதால் பிரதிவாதி வாங்காமல் வந்துவிட்டார் என்றால் சரியல்ல. உங்கள் ஊரை சேர்ந்த போஸ்ட்மேன் குமார் என்பவர் முன்னிலையில் உங்கள் கடன் தொகை முழுவதும் பிரதிவாதி கொடுத்துவிட்டார் என்றும், ஆனால் நீங்கள் ஏமாற்றிஉள்ளீர்கள் அவரை

விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. பிரதிவாதி தொகையை கொடுத்துவிட்டார் நீங்கள் அவரிடம் பணம் பறிக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஊரில் இல்லாத சமயத்தில் அவரது மனைவி சரளா என்பவரை ஆட்களை வைத்து மிரட்டி ரூ.18600 பணத்தை வாங்கிவந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அதுகுறித்து பிரதிவாதியின் மனைவி சரளா என்பவர் என் கணவர் இருக்கும் போது வாருங்கள் என்று கூறியபோது நீங்கள் ஆட்களை வைதது மிரட்டினீர்கள் என்றால் சரியல்ல. எங்களையே மிரட்டுகிறீர்களா என்று பிரதிவாதியின் மனைவியை பார்த்து நீங்கள் கேட்டுவிட்டு அவசர அவசரமாக இந்த வழக்கை தேதி தவறுதலாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி பணம் வாங்கியிருந்தால் தாவாவில் தேதி சரியாக போட்டிருப்பீர்கள் என்றும், அந்த திருத்த மனுவும் தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. அதேபோல் தாவாவில் சாட்சிகள் பெயர் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளோம். பிரதிவாதி உங்களிடம் பணம் எதுவும் வாங்கவிலலை, ஏற்கனவே வாங்கியிருந்த பணத்தை உங்களிடம் திருப்பிஅளிதது விட்டார் என்றும், அந்த கடனுறுதிசீட்டை திருப்பி தராமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள், பிரதிவாதிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போஸ்ட் மேன் குமாரை விசாரிக்க பிரதிவாதி தயாராக உள்ளார் என்றும், ஆகவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிவடைந்தது)

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-K.Kumarasivam,
District Munsif,
Polur.